# THE DR. LEO BARNES FOUNDATION














Office: 101, Samudra Seema, 329 Dr. Ambedkar Rd.,
Bandra (W), Mumbai - 400 050. Maharashtra, India.
Tel.: 022 - 2605 4658 / 2648 7460
E-mail: leobarnesfoundation1993@gmail.com
Website: www.leobarnesfoundation.org

# இவை அனைத்தும் துவங்கிய விதம்...



## நோக்கம்

இதன் இலட்சியம் மிக எளிதானது. அதாவது எந்த ஒரு கப்பல் தொழிலாளியின் குழந்தையும் மிக மதிப்புள்ள ''அறிவு'' என்ற அரும்சொத்தை பெறாமல் போய்விடும் நிலை வரக்கூடாது. குறிப்பாக பணமில்லை என்பதால் அந்நிலை ஏற்படவே கூடாது. எனவே, உயர் கல்விக்கான எந்த ஒரு கனவு ஆயினும் சரி, அதற்குரிய செலவுக்கான பண உதவியை டாக்டர். லியோ பர்னேஸ் ஃபவுண்டேஷன் (LBF) வழங்குகிறது. இதன் செயல்பாடுகளின் பின்னணியில் உள்ள முக்கிய நோக்கம் பேரார்வம், தீர்மானமான சிந்தனையுடன் செயல்படுதல் மற்றும் அனைத்திற்கும் மேலாக வெற்றி பெற வேண்டும் எனும் உத்வேகத்தை வளர்ப்பதும் மற்றும் ஆதரவளிப்பதுமாகும். சமூகத்தில் பலவிதமான தொழில்புரிவோருக்கு மத்தியில், கப்பல் தொழிலாளியாகப் பணிபுரிவோர் துரதிர்ஷ்டவசமாக அதிகம் படிக்காமல் இருக்கின்றனர். அவர்களுக்கு எழுத்தறிவு உள்ளதா என்றால் உண்டுதான். ஆனால் நல்ல கல்வியறிவு கொண்டவர்களா என்றால் இல்லை. இத்தகைய ஒரு மோசமான நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காக LBF பல திட்டங்கள் வகுத்துள்ளது. இதனால் சமூகத்தில் கப்பல் தொழில் புரிவோருக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். இதுவே டாக்டர் லியோ பர்னேஸின் கனவு. இதை நனவாக்க, எல்பிஎஃப் (LBF) உயர்கல்விக்காகவும், கடல் சம்பந்தப்பட்ட படிப்புகளுக்கும் கல்விஉதவித் தொகைகள் வழங்கி வருகிறது. இதில் நமது நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் கற்பிக்கப்படும் பல பட்டப் படிப்புகள், பட்டயப் (டிப்ளமா) படிப்புகள் அடங்கும்.

கப்பல் தொழில் புரிவோரின் நலனுக்காகப் பணிபுரியும் எல்பிஎஃப், அதே வேளையில் இவர்களின் குடும்பத்தினருக்காகவும் பல நற்பணிகளைச் செய்து வருகிறது.

இதன் பொறுப்புணர்வு இதோடு நின்று விடவில்லை. சமூகம் முழுவதுக்கும் இது விரிவுபடுத்தப்படுகிறது. எனவே, எல்பிஎஃப் சமூகத் திட்டங்களுக்கும் கூட உதவியளித்து வருகிறது.

உண்மையில், 1993ல் இது துவங்கப்பட்டதிலிருந்து கப்பலில் பணிபுரிவோருக்காக ஒன்றரைக் கோடி ரூபாய்க்கும் மேலான கல்விஉதவித் தொகை ஆக அளிக்கப்பட்டுள்ளது.

இதன் கனவு இதோடு நின்று விடவில்லை. ஒவ்வொரு ஆண்டும், இதன் பொறுப்புணர்வும், அதற்கேற்ப வழிகளும் கூட அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

# நோக்கம் உருவான விதம்

இந்த அமைப்பு உருவாகிட ஒரு தனிமனிதரின் சிந்தனையில் உதித்த கருத்துக்களே காரணம். ஆம், இதை நிறுவிய சேர்மன் டாக்டர் லியோ பர்னேஸ் அவர்களே இதற்கு காரணம் ஆவார். அவர் எவ்வித வசதியோ அல்லது வாய்ப்போ இன்றி பிறந்தவர் ஆவார். NUSIல் உயர்ந்த இடத்தை எட்டிப்பிடித்த அவரது போராட்டமான வாழ்க்கையில் அவர் அனைத்திலும் தனது முக்கிய சொத்தாகக் கருதியதைப் பெற்றார். ஆம். அதுவே **கல்வி.** பணமாகவோ அல்லது உயர்மட்டத் தொடர்புகளோகவோ எதுவுமே தனக்கு இல்லாததொரு சூழலில் அவர் தானாகவே தனக்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொண்டு தன் கனவுகளை நனவாக்கிக் கொண்டார். பொருளாதாரப் பிரச்சினைகளால் பள்ளிப் படிப்டை விட்ட அவர். அதன்பின் ஒரு கப்பலில் பணிபுரிபவராக தன் வாழ்க்கையைத் துவங்கினார். சாதாரணமான ஒரு கப்பல் தொழிலாளியின் வாழ்க்கையே அவரைக் கவர்ந்திருக்குமானால் அவரது கல்வி அத்துடனே முற்றுப்புள்ளி பெற்றிருக்கும். ஆனால், அவர் கல்வியின் மீது அதீத ஆர்வம் கொண்டவராக, ஒரு புறம் வாழ்க்கையில் போராடிக் கொண்டே B.A., **LLM** படித்ததோடு கப்பல்தொழில் சம்பந்தமான சட்டப்படிப்பில் Ph.D பெற்றார். அனைத்திற்கும் மேலாக, ஹார்வர்டு பல்கலைக் கழகத்திலிருந்து டிரேட் யூனியன் ஸ்டடிஸ்-ல் ஒரு டிப்ளமாவும் பெற்றார். அவரை நன்கு அறிந்தவர்கள், அவர் தினந்தோறும் தன் விரலில் ஹார்வர்டு ரிங் அணிந்து கொண்டு இருந்ததை எப்போதுமே நினைவு வைத்திருப்பார்கள். அவருக்கு அது மனவலிமை அளித்ததுடன் அவரது பயணம் இன்னும் எந்த அளவு நீண்டது.. எவ்வளவு கடினமானது.. என்பதை அவருக்கு நினைவுறுத்தியது எனலாம். தெரு விளக்குகளின் அடியில் கல்வி கற்பது எப்படி என்பது பற்றி அறிந்த மனிதர் அவர். இந்தக் காரணத்தினாலேதான், எந்த ஒரு கப்பல் தொழிலாளியின் குழந்தையும் கல்வியறிவு எனும் அரும்சொத்தை பெறுவதில் எந்த வித துயரமும் படக்கூடாது என்றும், அவரைப்போல் யாரும் கல்வி கற்க கஷ்டப்படக்கூடாது என்ற எண்ணத்திலும், அவரது கருத்துக்களின்படி வழிநடப்பவர்களால் அவரது அறுபதாவது பிறந்தநாள் அன்று அவருக்கு வழங்கப்பட்ட ரூபாய் 2,22,22,222 தொகையைக் கொண்டு டாக்டர் லியோ பர்னேஸ் ஃபவுண்டேஷன் உருவானது. அவரின் கனவே இன்றைய LBF.



## இதன் தற்போதைய டிரஸ்டிகள்

டாக்டர் பிளான்ஞ் பர்னேஸ் (சேர்பெர்சன்)

Ms. ஆர்த்தி பர்னேஸ் (வைஸ்-சேர்பெர்சன்)

Ms. வித்யா பர்னேஸ்

Mr. வசந்த் சாமந்த்

Mr. வின்ஸ்டன் மச்சாதோ

## எங்களின் தற்போதைய சேர்பெர்சன்

அமரர் டாக்டர் லியோ பர்னேஸின் துணைவியாரான டாக்டர் பிளாஞ்ச் பர்னேஸ் நன்கு படித்தவர் என்பதோடு, மென்டல் ஹெல்த் ஆஃப் இந்தியன் ஸீஃபேரர்ஸ் (கப்பல் தொழிலாளிகளாய் பணிபுரியும் இந்தியர்களின் மனவளம்) எனும் தலைப்பில் Ph.D பெற்றவருமாவார். 2001 ஆகஸ்ட் 13ம் தேதியன்று சேர்பெர்சன் ஆன டாக்டர் லியோ பர்னேஸ் அவர்கள் காலமான பின்பு, அவரைத் தொடர்ந்து சேர்பெர்சன் பதவியை தற்போது வகிக்கிறார். ஸீஃபேரர்ஸ் இன்டர்நேஷனல் ரிசர்ச் சென்டர், யுனிவர்சிட்டி ஆஃப் வேல்ஸ், யுகே-யால் கீழ்க்கண்ட இரு பெரும் திட்டங்களில் பங்கேற்க விசிட்டிங் அகாடமிசியன் ஆக அவர் அழைக்கப்பட்டார். அவை:

1) இந்தியக் கப்பல் தொழிலாளிகளுக்கு விபத்துக்கள் மற்றும் காயங்கள் காரணமாக ஏற்படும் மரணங்கள் பற்றிய உலகளாவிய கணிப்பீடு.

2) இந்தியக் கப்பல் தொழிலாளிகளுக்கு ஏற்படும் இதய சம்பந்தமான நோய்.

இந்த திட்டங்களைப் பற்றி அவர் இரு புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அதோடு கப்பல் தொழிலாளிகள் மற்றும் அவரது குடும்பங்களுக்கு ஆரோக்கியம் மற்றும் ஆலோசனை அளிக்க நவிக் மனோவிகாஸ் கேந்திராவை நிறுவியுள்ளார். சமீபத்தில் அவர் "கப்பல் தொழிலாளிகளின் குடும்பங்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் வாழ்க்கைத் தரம்" (தி லைஃப் பேட்டர்ன்ஸ் அன்ட் குவாலிடி ஆஃப் லைஃப் ஆஃப் ஸீஃபேரர்ஸ் ஃபேமிலிஸ்) எனும் தலைப்பில் ஒரு திட்டத்தை முடித்துள்ளார்.



# எல்ஆர்ஃப் செயல்பாடுகள்

## கல்வி உதவித் தொகைகள்

### தகுதி விபரங்கள் :

1) விண்ணப்பிப்பவர் ஒரு C.D.C.தாரரின் குழந்தையாகவோ அல்லது நெருங்கிய உறவினராகவோ அல்லது C.D.C.தாரரை சார்ந்து வாழும் அவரால் காப்பாற்றக்கூடிய நபராகவோ அல்லது அவரே C.D.C.யாகவோ இருக்கவேண்டும். C.D.C. மரணம் அடைந்திருந்தாலும் இவ்விதி பொருந்தும்.

2) விண்ணப்பதாரர் NUSIன் ஓர் ரெகுலர் மெம்பரின் குழந்தையாக அல்லது நெருங்கிய உறவினராக அல்லது அவரைச் சார்ந்து வாழ்பவராக இருக்க வேண்டும்.

3) விண்ணப்பதாரர் எல்பிஎஃப்புக்கு நேரடியாக நன்கொடை அளித்துள்ள, C.D.C.தாரரின் குழந்தை அல்லது நெருங்கிய உறவினர் அல்லது அவரைச் சார்ந்து வாழ்பவராக இருக்கலாம்.

4) விண்ணப்பதாரர் NUSI அலுவலர் ஒருவரின் குழந்தை அல்லது நெருங்கிய உறவினர் அல்லது அவரைச் சார்ந்து வாழ்பவராக இருக்கலாம்.

5) விண்ணப்பதாரர் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை (ஹையர் செகண்டரி) அல்லது அதற்குச் சமமான படிப்பை முடித்திருக்க வேண்டும். மற்றும் இந்திய அரசு அல்லது மாநில கல்வித்துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கல்வி அமைப்பிலும் பட்டம்/முதுகலைப் பட்டம் அல்லது டிப்ளமா கோர்ஸுக்கு விண்ணப்பிப்பவராய் இருக்க வேண்டும்.

6) ஆல் இந்தியா டெக்னிக்கல் டிபார்ட்மெண்ட் அல்லது **AICTE / NCTE / MCI / NAAC / RCI** மற்றும் அது போன்றவைகளின் கீழ் உள்ள இந்தியப் பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள டெக்னிக்கல் அல்லது புரொஃபெஷனல் கோர்ஸுக்கு விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கலாம்.

7) இதர நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள கோர்ஸ்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களும் தகுதியுடையவர்களே.



# விண்ணப்பிக்கும் முறை

இந்த கல்வி உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாணவர்கள் கீழ்க்கண்ட முகவரியிலுள்ள எல்பிஎஃப் அலுவலகத்தில் இலவசமாகக் கிடைக்கும் குறிப்பிட்ட படிவத்தை நிரப்பி விண்ணப்பிக்க வேண்டும் :

***101, சமுத்ர ஷிலா***
***329, டாக்டர் அம்பேத்கர் ரோடு,***
***பாந்திரா (மேற்கு) மும்பை-400 050.***
***மகாராஷ்டிரா, இந்தியா.***
***தொ : 605 7915.***
***ஃபேக்ஸ் : 604 4086.***

இத்தகைய விண்ணப்பம் ஒன்றுடன் இணைக்கப்பட வேண்டியவை :

1. மெய்ச்சான்று அளிக்கப்பட்ட பிறந்த தேதி சான்றிதழ்.
2. C.D.C.யின் நகல்
3. பட்ட படிப்பு பயில S.S.C. மற்றும் H.S.C.யின் (அல்லது அதற்கு சமமானவை) மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள்.
4. அரசிடமிருந்தோ/எந்த இதர NGOவிடமிருந்தோ/அமைப்பிடமிருந்தோ ஏதேனும் ஒரு இதர கல்வி உதவித் தொகையையோ / விதிவிலக்கையோ மாணவர் பெறுகிறாரா இல்லையா என்பதற்கு உறுதி கூறி கல்லூரி/கல்வி அமைப்பு முதல்வர் வழங்கும் கடிதம்.
5. டியூஷன் கட்டணம் அல்லது பரீட்சை கட்டணத்துக்கான அசல் ரசீதுகள் ***(ரூ.500/-க்கு மேல் எனில் ஸ்டாம்ப் ஒட்டிய ரசீது)***
6. கோர்ஸுக்காக வாங்கிய புத்தகங்கள் மற்றும்/அல்லது சாதனங்களுக்கான அசல் பில்கள்.
7. ரேஷன் கார்டின் நகல்

படிப்புக்கான காலவரம்பு துவங்கிய ஒரு மாத காலத்துக்குள் விண்ணப்பம் எல்பிஎஃப் அலுவலகத்துக்கு வந்து சேரவேண்டும். வெளிநாட்டு பல்கலைக்கழகம் எனில், காலவரம்பு துவங்குவதற்கு குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு முன்பு விண்ணப்பம் வந்து சேர வேண்டும்.



# கல்வி உதவித் தொகை விபரங்கள்

ஒவ்வொரு கல்வியாண்டும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், அதேபோல ஒவ்வொரு நிதியாண்டிலும் கிடைக்கும் நிதியைப் பொறுத்தும், ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை மாறுபடக் கூடும்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கோர்ஸ்கள் பயில விண்ணப்பிக்கும் நபர்கள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் வழங்கும் ஏற்புக் கடிதத்துடன் (அக்செப்டன்ஸ் லெட்டர்) விமான டிக்கெட்டையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவர்கள் ரூ.35,000/- வரை விமானப் பயணச் செலவை பெறத் தகுதியுடையவர்கள்.

***முந்தைய கல்வியாண்டில் தேர்ச்சி பெற்றுவிட்டதற்கான சான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் மட்டுமே ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.***



# ஆய்வுகளுக்கான உதவித்தொகை

**ஆய்வின் வகை :**

கப்பல் தொழிலாளிகள், குறிப்பாக இந்தியர்கள் சம்பந்தமாக அவர்களின் சமூகநிலை, பொருளாதாரம், மருத்துவம், மனோநிலை, சட்டம் மற்றும் இதர எந்த விஷயம் குறித்தும் ஆய்வு சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். ஆய்வு செய்பவர்/அமைப்பு அல்லது டிரஸ்டால் தனிப்பட்ட முறையில் நடத்தப்பட சமர்ப்பிக்கப்படும் ஒரு திட்டமாக இது இருக்கலாம்.

**உதவித்தொகை விபரங்கள் :**

ஆய்வு ஓர் ஆண்டுக்கும் மேலாக மேற்கொள்ளப்படுமாயின், உதவித் தொகைகள் திட்ட அடிப்படையில் அல்லது ஓர் ஆண்டு அடிப்படையில் வழங்கப்படும்.

ஃபவுண்டேஷன் அலுவலகத்தில் கிடைக்கும் குறிப்பிட்ட படிவத்தில் விபரங்கள் குறிப்பிடப்பட்டு, விண்ணப்பப் படிவங்களின் அசல் மற்றும் ஒரு நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது ஒரு நிபுணர் குழுவால் பரிசீலிக்கப்படும். தேவையெனில் தனிப்பட்ட நேர்முகத்தேர்வு நடத்தப்படும். உதவித்தொகையை தொடர்ந்து வழங்குவது என்பது ஆய்வின் மதிப்புப்படி பரிசீலிக்கப்படலாம்.

இவ்விஷயத்தில் டிரஸ்டின் சேர்பெர்சனின் தீர்மானமே இறுதியானது என்பதுடன் மறுபரிசீலனைக்கோ அல்லது மறுகண்ணோட்டத்துக்கோ அனுமதிக்கப்படாது.

# ஸீமென்களின் நலன்

ஸீமென் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கான ஒரு ஆலோசனை மையமாக செயல்படும் ஓர் நல அமைப்பே ***நவிக் மனோவிகாஸ் கேந்திரா (NMK)*** ஆகும். இதன் நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு:

அ) கப்பலில் பணியாற்றுவோர் மற்றும் அவர்களது குடும்பங்களின் சமூக, மனோநிலை மற்றும் தொழில் பிரச்சினைகள் பற்றி ஆய்ந்திட ஆய்வுகளை மேற்கொள்தல்

ஆ) ஆலோசனை வழங்குதல், குறிப்பாக அவர்களின் குழந்தைகளுக்கு தொழில் சம்பந்தமான விஷயத்தில் ஆலோசனை வழங்குதல்.



## ஆலோசனை பெறுதல் :

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பலவிதமான விஷயங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு N.M.K.யை அணுகி ஆலோசனை பெறலாம் :

1) குழந்தைகளுக்கு தொழில் சம்பந்தமான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை.
2) புத்திசாலித்தனம், தோற்றம், விருப்பங்கள் மற்றும் குணநலன்கள் பற்றிய மதிப்பீடு
3) கப்பலில் பணியாற்றுவதற்கு நபர்களைத் தேர்வு செய்தல், நேர்முகத் தேர்வு செய்தல் மற்றும் உடல்நலப் பரிசோதனை செய்தல்.
4) பாலுறவு, திருமண உறவு மற்றும் உறவு நிலை சம்பந்தமான ஆலோசனை.
5) பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் சம்பந்தமான மதிப்பீடு.
6) பணியாற்றுமிடத்தில் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் பணி சம்பந்தமான பிரச்சினைகளை சமாளித்தல்
7) குடும்ப நல செயல்திட்டங்கள்
8) மனச்சோர்வு, போதை மருந்துக்கு அடிமையாதல் போன்றவற்றுக்கான உளநல சிகிச்சை.
9) ஆங்கில அறிவை மேம்படுத்திக் கொள்தல் மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வகுப்புகள்.

## இடம் மற்றும் அலுவலர்கள்

அனுபவமிக்க மனநல நிபுணர், ஆலோசகர்கள் மற்றும் அலுவலர்கள் மூலம் இந்தியாவில் பல பகுதிகளில் ஆலோசனை வழங்கப்படுகிறது. இந்த முகாம்கள் நடைபெறும் இடங்கள் மற்றும் தேதிகள் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

பல்வேறு பணிகள் புரிடம் நிபுணர்களுடனான தகவல் தொடர்பு மற்றும் நெட்ஒர்க்கிங் தொடர்புக்காக எல்பிஎஃப்-பால் பயன்பெற்றோர் அதன் முன்னாள் மாணவர் அமைப்பில் (Aluminii Association) இணையுமாறு வரவேற்கப்படுகின்றனர்.

நீங்கள் கூடுதல் விபரங்களை எல்பிஎஃப் அலுவலகத்தில் பெறலாம் அல்லது **www.leobarnesfoundation.org** எனும் இணையதளத்திலிருந்து பெறலாம்.



# Counselling Services and Academic Advising


Life Skill


Yoga Session


Career Guidance Seminar


Career Counselling


Addressing Seamen Needs


Camp


Aptitude Testing

DR. LEO BARNES FOUNDATION

101, Samudra Seema, 329, Dr. Ambedkar Road,
Bandra (W), Mumbai - 400 050, Maharashtra, India.
Tel.: 022 - 2605 4658 / 2648 7460
E-mail: leobarnesfoundation1993@gmail.com
Website: www.leobarnesfoundation.org